முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 90 வீரர் – வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 5 கோடியே 96 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 9 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 276 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகக் கட்டடங்கள், வாரிய பிரிவு அலுவலகக் கட்டடம், சமுதாயக்கூடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 56 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்ட மனை மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் எ. சரவணவேல்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய-பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற

90 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.5.97 கோடி ஊக்கத் தொகை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 14-

தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 90 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.5.97 கோடிக்கான உயரிய ஊக்கத் தொகையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 90 வீரர் - வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 5 கோடியே 96 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 9 விளையாட்டு வீரர், வீராங்கனை களுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

2022ஆம் ஆண்டு நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற சென்னையை சார்ந்த எஸ்.ரோஹித் கிருஷ்ணாவிற்கு 3 இலட்சம் ரூபாயும், 24.10.2022 முதல் 30.10.2022 வரை ஸ்பெயின் நாட்டின், சாண்டாண்டரில் நடைபெற்ற BWF ஜூனியர் பேட்மிண்டன் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற சென்னையை சார்ந்த எஸ்.சங்கர் முத்து சாமிக்கு 4 இலட்சம் ரூபாயும், 18.12.2019 முதல் 23.12.2019 வரை ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற 57வது தேசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற 21 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 79 இலட்சம் ரூபாயும்;

2021-2022ஆம் ஆண்டு நடைபெற்ற சப்ஜூனியர், ஜூனியர் மற்றும் சீனியர் தேசிய அளவிலான சாப்ட்டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 56 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு 2 கோடியே 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயும், 1.11.2022 முதல் 6.11.2022 வரை ஜப்பான் நாட்டின், டோக்கியோவில் நடைபெற்ற BWF பாரா பேட்மிண்டன் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற 3 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு 2 கோடியே 55 இலட்சம் ரூபாயும், 26.10.2022 முதல் 3.11.2022 வரை புது தில்லியில் நடைபெற்ற கான்டிடெனன்டல் மகளிர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற 3 விளையாட்டு வீரர்களுக்கு 15 இலட்சம் ரூபாயும், 30.11.2021 முதல் 4.12.2021 வரை மலேசியா, கோலாலம்பூரில் நடைபெற்ற 20வது ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் ஆண்கள் குழுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற வேலன் செந்தில்குமார் மற்றும் சவுரவ்கோசல் ஆகிய இருவருக்கும் தலா 10 இலட்சம் ரூபாயும், பெண்கள் குழுப்பேட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற செல்வி. ஜோஷனா சின்னப்பா, செல்வி. சுனைனா குருவில்லா மற்றும் அபராஜிதா பாலமுருகன் ஆகிய மூவருக்கும் தலா 5 இலட்சம் ரூபாயும்;

என மொத்தம் 5 கோடியே 96 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை 90 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று 9 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் (12.07.2023) நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 13 இடங்களில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டங்களில் அடிப்படை வசதிகள் மேம்பாடு குறித்து பெறப்பட்ட மனுக்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீதான மேல்நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் ஆகியோருடனான ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிருவாக ஆணையரக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன (TUFIDCO)த் தலைவர்/மேலாண்மை இயக்குநர் முனைவர் நீரஜ் மிட்டல், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புர உள் கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவன (TNUIFSL)த் தலைவர் / அரசு முதன்மைச் செயலாளர் மரு.எஸ்.விஜயகுமார், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிருவாக இயக்குநர் இரா. கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, இயக்குநர்/ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பா.பொன்னையா, நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ்.சிவராசு, தலைமைப் பொறியாளர்கள், மண்டல செயற்பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.07.2023) நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2023 ஜூன் 17 ஆம் தேதி முதல் ஜூன் 25ஆம் தேதி வரை ஜெர்மனியில் பெர்லின் நகரில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் உலக விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 19 வீரர் வீராங்கனைகள் மற்றும் 3 பயிற்றுநர்களுக்கு பரிசுகள் வழங்கி குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் சங்க நிர்வாகிகள் உடனுள்ளனர்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளைச் சேர்ந்த

பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது மாதந்தோறும் ஆய்வு!

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

சென்னை, ஜூலை 14-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் 12.07.2023 நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 13 இடங்களில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டங்களில் அடிப்படை வசதிகள் மேம்பாடு குறித்து பெறப்பட்ட மனுக்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீதான மேல்நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் ஆகியோருடனான ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிருவாக ஆணையரக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதன டிப்படையில், தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டங்களின்போது பொதுமக்களிடமிருந்து குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, சாலை மேம்பாடு, மின் வசதிகள், நீர்நிலைகளை மேம்படுத்துதல், பூங்காக்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளைச்சார்ந்தஅலுவலர்களுக்கு மேல்நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட மனுக்களும் மேல்நடவடிக்கைகளுக்காக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பெறப்பட்ட மனுக்களின் மீது பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இன்னும் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், புதிய பணிகளுக்கான திட்ட முன்மொழிவுகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியக்கூடிய அனைத்து நிலை அலுவலர்களும் பொதுமக்களிடமிருந்து பெறக்கூடிய மனுக்களின் மீதான நடவடிக்கைகளை எவ்வித தொய்வுமின்றி மேற்கொண்டு பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

மேலும், பொதுமக்களிடமிருந்து பெறக்கூடிய மனுக்களில் புதிய திட்டங்களுக்கான கோரிக்கைகள் வரும் பட்சத்தில் உடனடியான திட்ட அறிக்கைகளை தயார் செய்து முன்மொழிவுகளை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். உரிய பரிசீலனைகள் மேற்கொண்ட பின்னர் அதற்கான அனுமதிகள் உரிய கால கட்டத்திற்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். மாநகராட்சி, நகராட்சி ஆணையர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள் தினந்தோறும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, குடிநீர் வழங்கல், சாலை மேம்பாடு, பூங்காக்கள் பராமரிப்பு, மின் வசதிகள், மழைநீர் வடிகால் ஆகியவற்றை தொடர்ந்து ஆய்வு செய்து வரவேண்டும். பருவமழைக்கு முன்னதாக மழைநீர் வடிகால்கள் மற்றும் பாதாள சாக்கடைகளில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலிருந்து பொதுமக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும். கோரிக்கையின் விவரங்கள், கோரிக்கை மனுக்கள் பெறப்பட்ட நாள், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நாள் மற்றும் மனுக்கள் மீதான நிலை குறித்த விவரங்கள் முற்றிலுமாக ஆய்வு செய்யப்படும். எனவே, அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களும் பொதுமக்களிடமிருந்து பெறக்கூடிய மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன (TUFIDCO)த் தலைவர்/மேலாண்மை இயக்குநர் முனைவர் நீரஜ் மிட்டல், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் தா. கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புர உள் கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவன (TNUIFSL)த் தலைவர் / அரசு முதன்மைச் செயலாளர் மரு. எஸ்.விஜயகுமார், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிருவாக இயக்குநர் இரா. கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, இயக்குநர்/ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பா.பொன்னையா, நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ்.சிவராசு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி.மகேஸ்வரி ரவிகுமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் வி.சரவணன், நகராட்சி நிருவாக துணை இயக்குநர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமைப் பொறியாளர்கள், மண்டல செயற்பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி

காரிமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் தெருமுனை பிரச்சார கூட்டம்!

தலைமைக் கழக பேச்சாளர் செந்தாமரைக்கண்ணன் சிறப்புரை!

தருமபுரி, ஜூலை 14-

தருமபுரி மேற்கு மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படியும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படியும், தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் காரிமங்கலம் ஒன்றியங்களைச் சேர்ந்த பந்தாரஹள்ளி, அம்பேத்கர் நகர், மொட்டலூர் மற்றும் ஜிட்டாண்டஹள்ளி சொக்கம்பட்டி பகுதிகளில் காரிமங்கலம் மத்திய ஒன்றிய செயலாளர் இல.கிருஷ்ணன், காரிமங்கலம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அடிலம் டி.அன்பழகன், காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.வி.டி.கோபால் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் தலைமைக் கழக பேச்சாளர் ப.செந்தாமரைக் கண்ணன் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மாநில விவசாய அணி துணை செயலாளர் சூடப்பட்டி டி.சுப்பிரமணி, மாவட்ட துணை செயலாளர் ஆ.மணி, மாவட்ட பொருளாளர் முருகன், பாலக்கோடு மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.கே.அன்பழகன், மாவட்ட அறங்காவல் குழு உறுப்பினர் துரை, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மகேஷ்குமார், தகவல் தொழில்நுட்ப அணி கு. தமிழழகன், ஏ.வி.குமார், எம்.வீ.டி.யுவராஜ், மணிவண்ணன், ம.பா.கண்ணன் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், இளைஞர் அணி 400 க்கு மேற்பட்ட மகளிர், நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

'சந்திரயான்-3' விண்கலம் இன்று ஏவப்படுகிறது!

ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 14 -

'சந்திரயான்-3' விண்கலத்தை சுமந்து செல்லும் 'எல்.வி.எம்.3 எம்4' ராக்கெட்டில் விண்கலத்தின் அனைத்து பாகங்களும் முழுமையாக பொருத்தப்பட்டு உள்ளன. தற்போது அனைத்து பரிசோதனைகள் மற்றும் சோதனை ஓட்டமும் நிறைவடைந்த நிலையில், எரிபொருள் நிரப்பும் பணிகளும் இறுதிகட்டத்தை எட்டி உள்ளது.

'சந்திரயான் -3' விண்கலத்தில் உள்ள 'இன்டர்பிளானட்டரி' என்ற எந்திரம் 3 முக்கிய பகுதிகளை கொண்டுள்ளது. ராக்கெட்டில் உள்ள 'புரபுல்சன்' பகுதி விண்கலத்தில் உள்ள ரோவர், லேண்டர் பகுதியை நிலவில் 100 கி.மீ. தொலைவுக்கு கொண்டு செல்லும் வகையில் வடிவமைத்து பொருத்தப்பட்டு உள்ளது. பின்னர் லேண்டர் பகுதி நிலவில் மெதுவாக தரையிறங்கும் பகுதியாகும். ரோவர் பகுதி நிலவில் ஆய்வு செய்யும் கருவியாகும்.

இந்த 3 பகுதிகளுக்கும் இடையே ரேடியோ அலைவரிசையும் பரிசோதிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில் ராக்கெட்டுக்கான இறுதிக் கட்டப் பணியான 25½ மணி நேர கவுண்ட்டவுன் நேற்று பகல் 1 மணிக்கு தொடங்கியது. முழுமையாக கவுண்ட்டவுனை முடித்து கொண்டு, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2வது ஏவுதளத்தில் இருந்து, நிலவுக்கு அனுப்பப்படும் இந்தியாவின் 3வது விண்கலமான 'சந்திரயான்3', விண்வெளி ஆய்வில் இந்தியாவை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.